[1995 ஏப்ரல் 24

410—

ஏலகிரி மலையில் வீட்டு வசதி வாரிய வீடுகள் கட்டுதல்

***37750—**திரு. சி. ஞானசேகரன்:.

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், ஏலகிரி மலையில் வீட்டுவசதி வாரியம் மூலம் நடுத்தர மக்களுக்கும், ஏழைகளுக்கும் வீடு கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகரப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இத்தகைய திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10-40

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி பொறுப்பை ஏற்ற பிறகு இந்த 4 ஆண்டு காலத்தில் இந்தியாவிலே எந்த முதலமைச்சரும் சாதிக்க முடியாத பல அற்புத சாதனைகளை படைத்துள்ளார்கள். நம்முடைய புரட்சித் தலைவியின் ஆட்சி காலத்தில்தான் ஏலகிரி மலை சுற்றுலா மையம் ஆக்கப்பட்டது. ஏலகிரி மலை சுற்றுலா மையம் ஆக்கப்பட்டவுடன், ஒரு நாளைக்கு நூற்றுக்கணக்கான மக்கள் ஏலகிரி மலைக்கு வருகிறார்கள். புரட்சித் தலைவியின் 4 ஆண்டு கால ஆட்சியில்தான் தொடர்ந்து ஒவ்வொரு மே மாதமும் கோடை விழா நடைபெறுகின்ற ஏலகிரி மலைக்கு சாலைகள் போடப்பட்டுள்ளன. பேருந்துகள் அதிக அளவில் விடப்பட்டிருக்கின்றன. அதனால் மலைவாழ் மக்களுக்கு வீட்டுவசதி வாரியத்தின்மூலம் வீடுகள் கட்டித் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணை எண் 1007 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 17-10-1989-ன் படி தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் 500 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் குடியிருப்புகள் உருவாக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. மேற்படி திட்டத்தில் வாரிய தலைமையகத்தாலும், அரசாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் பொதுமக்களின் தேவைகள் குறித்த அறிக்கையின் அடிப்படையில்தான் வாரிய திட்டங்கள் தற்போது செயல்படுத்தப்பட்டுவருகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் செயல்படும் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் வரிசையில் ஏலகிரி மலை இடம் பெறவில்லை. எனவே தற்போது அங்கே எந்தத் திட்டமும் அரசின் பரிசீலனையில் இல்லை.

1995 ஏப்ரல் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கி. தருமலிங்கம்.

திரு. கி. தருமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி வாரியத்தின் மூலம் அத்தகைய வீடுகள் கட்டப்படவில்லை என்றாலும், ஒரு சிறப்பு நிலையாக—எங்களது மாவட்டத்தில் ஏலகிரி மட்டுமே கொஞ்சம் குளுகுளுவென்று இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்கூட அங்கே வந்து ஓய்வு எடுத்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஓய்வு எடுக்கவில்லை. உங்கள் தொகுதிக்கு வந்தேன் அப்போது கூட்டிக் கொண்டுபோய் காண்பித்தீர்கள்.

திரு. கி. தருமலிங்கம்: நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக கோருவது எல்லாம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டப்படவில்லை என்றாலும், இளம் தம்பதிகளுக்கு தேனிலவு இல்லமாவது கட்டி கொடுக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனிலவு இல்லங்கள் கட்டிக் கொடுக்கின்ற திட்டம் எதுவும் தமிழக அரசின் வீட்டு வசதி வாரியத்தின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 411, திரு. சி. சுவாமிநாதன், இருக்கையில் இல்லை.

வினா எண் 412, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

412—

தேனிலவு தோட்டம் திட்டம் செயல்படுத்துதல்

***35310**—திருமதி கே. மரியம் உல் ஆசியா:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊட்டி, கொடைக்கானல் ஆகிய பகுதிகளில் தேனிலவு தோட்டத் திட்டம் செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். தேனிலவு தோட்டத் திட்டத்தை ஊட்டி, கொடைக்கானல்., ஏற்காடு ஆகிய மலைப் பகுதிகளில் நிறைவேற்ற அரசு ஆணை வழங்கியுள்ளது.